# ஜனவரி – 31 – புதன்

**புனித ஜோன் பொஸ்கோ**

**நீரே எனக்குப் புகலிடம்: இன்னலினின்று என்னை நீர் பாதுகாக்கின்றீர்.திபா. 32:7**

---

## முதல் வாசகம்: 2 சாமுவேல் 24 : 2,9 - 17

அக்காலத்தில் அரசர் தாவீது யோவாபையும் அவரோடிருந்த படைத்தலைவர்களையும் அழித்து, "மக்கள் தொகை என்னவென்று நான் அறிய வேண்டும். நீங்கள் தாண் முதல் பெயேர்செபா வரை அனைத்து இஸ்ரயேல் குலங்களிடையே சென்று வீரர்கள் தொகையை கணக்கிடுங்கள்" என்றார். யோவாபு, வீரர்களின் தொகைக்கணக்கை அரசரிடம் தந்தார். வாளை ஏந்தும் வீரர்கள் எண்ணூறு பேர், இஸ்ரயேலிலும், ஐந்நூறு பேர் யூதாவிலும் இருந்தனர். வீரர்களின் தொகையைக் கணக்கெடுத்தபிறகு தாவீது மனம் வருந்தினார். "நான் மாபெரும் பாவம் செய்தேன்! ஆண்டவரே! உன் அடியானின் குற்றத்தை மன்னித்தருளும்! ஏனெனில் நான் பெரும் மதியீனனாய் நடந்து கொண்டேன்" என்று தாவீது ஆண்டவரிடம் மன்றாடினார். தாவீது காலையில் எழுந்தார். தாவீதின் திருக்காட்சியளராகிய இறைவாக்கினர் காதிற்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. "நீ சென்று இவ்வாறு ஆண்டவர் கூறுவதாகத் தாவீதிடம் சொல் "நான் உன் மீது மூன்று தண்டனைகளைக் குறிப்பிடுகிறேன். நீ ஒன்றைத் தேர்ந்தெடு. அதன் படி நான் செய்வேன். காது தாவீதிடம் வந்து அவரிடம் பேசி வெளிப்படுத்தியது "உனது நாட்டில் ஏழு ஆண்டு பஞ்சம் வரட்டுமா? உன் எதிரிகள் உன்னைப்பின்தொடர, மூன்று மாதங்கள் நீ தப்பியோட வேண்டுமா? அல்லது உன் நாட்டில் மூன்று நாள்கள் கொள்ளை நோய் ஏற்படலாமா? என்னை அனுப்பியவருக்கு நான் என்ன மறுமொழி சொல்ல வேண்டும் என்று சிந்தித்து முடிவுசெய் ". "நான் மிகவும் மனவேதனையுற்றுள்ளேன். ஆண்டவரது கையில் நாம் விழுவோம். ஏனெனில் அவரது இரக்கம் பெரிது! மனிதரின் கையில் விழவேண்டாம்" என்று தாவீது கூறினார். ஆண்டவர் காலை முதல் குறித்த நேரம் வரை இஸ்ரயேலின் மீது கொள்ளை நோய் அனுப்பினார். தாண் முதல் பெயேர்செபாவரை எழுபதாயிரம் மக்கள் மாண்டனர். வானதூதர் எருசலேமை அழிப்பதற்காக அவன்மீது தன் கையை ஓங்கினார். ஆண்டவர் அத்தீமையை குறித்து மனம் வருந்தி மக்களை அழித்துக் கொண்டிருந்த வானத்தூதரை நோக்கி, "போதும்! உன் கையைக் கீழே போடு "என்றார். அப்போது ஆண்டவரின் தூதர், எபூசியன் அரவுனாவின் போரடிக்கும் களத்தருகே இருந்தார். மக்கள் அழித்துக் கொண்டிருந்த ஆண்டவரின் தூதரை தாவீது கண்டபோது, அவர் ஆண்டவரை நோக்கி, "பாவம் செய்தவன் நானல்லவோ? தீச்செயல் புரிந்தவன் நானல்லவோ? இம்மந்தை எக்குற்றம் செய்தது? இப்போது உம் கை என்னையும் என் தந்தையின் வீட்டாரையும் வதைப்பதாக! என்று கூறினார்.

**பதில்பாடல்:** ஆண்டவரே! என் நெறிகேட்டையும் பாவத்தையும் போக்கினீர்

## நற்செய்தி : மாற்கு 6 : 1 - 6

அக்காலத்தில் இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தமது சொந்த ஊருக்கு வந்தார். அவருடைய சீடரும் அவரைப் பின் தொடர்ந்தனர். ஓய்வுநாள் வந்தபோது அவர் தொழுகைக்கூடத்தில் கற்பிக்கத் தொடங்கினார். அதைக் கேட்ட பலர் வியப்பில் ஆழ்ந்தனர். அவர்கள், "இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? என்னே இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்! என்னே இவருடைய கைகளால் ஆகும் வல்ல செயல்கள்! இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன்தானே! யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் இங்கு நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா?" என்றார்கள். இவ்வாறு அவரை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயங்கினார்கள். இயேசு அவர்களிடம், "சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்" என்றார். அங்கே உடல் நலமற்றோர் சிலர்மேல் கைகளை வைத்துக் குணமாக்கியதைத் தவிர வேறு வல்ல செயல் எதையும் அவரால் செய்ய இயலவில்லை. அவர்களது நம்பிக்கையின்மையைக் கண்டு அவர் வியப்புற்றார். அவர் சுற்றிலுமுள்ள ஊர்களுக்குச் சென்று கற்பித்துவந்தார்.

**தியானம்:** இன்றைய வாசகத்தில் ஆண்டவரிடம் நாங்கள் செய்த பாவத்திற்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்போமாயின் எவ்வாறான பாவமாக இருந்தாலும் அன்று தாவீது தனது பாவத்தை உணர்ந்து மனம்வருந்தி மன்னிப்பு வேண்டினாரோ அதேபோன்று நாங்களும் ஆண்டவர் இயேசுவிடம் எமது பாவங்களை மன்னிப்பார் என்று நம்பியவர்களாக, விசுவசித்தவர்களாக கேட்போமாயின் அவர் எமது பாவங்களையும் மன்னித்து புதுவாழ்வு அருள்வார். "நான் மாபெரும் பாவம் செய்தேன்! ஆண்டவரே உன் அடியானின் குற்றத்தை மன்னித்தருளும்! ஏனெனில் நான் பெரும் மதியீனனாக நடந்து கொண்டேன்." (2சாமு.24:10)ல் பார்க்கின்றோம். நாங்கள் மீண்டும் மீண்டும் பாவங்கள் செய்யும் பொழுது எம்மைத் திருத்துவதற்காக பலவிதமான தண்டனைகளை கொடுத்து திருத்த முனைகின்றார். ஏனெனில் அவர் மன்னிக்கின்ற இறைவன், மனதிறங்குகின்ற இறைவன். எவ்வாறன பாவத்திற்றிகு அடிமையானாலும் மனம்வருந்தி மன்னிப்பு வேண்டுவோமாயின் நிற்சயமாக அவர் எமது பாவங்களைமன்னிப்பார். ஆனால் நாங்களோ சிந்தித்துப் பார்ப்பதுமில்லை, ஏற்றுக் கொள்வதுமில்லை. ஏனெனில் களவு, பொய், காமவேட்கை, விபச்சாரம் இவ்வாறான அசுத்தங்கள் நிறைந்து காணப்படுவதால் அவ்வாறான தீய செயல்களுக்கு எமது மனங்களை செலுத்தி இறைவனை சுவைக்க மறந்து விடுகின்றோம். சிந்தித்து பார்க்கும்பொழுது உலகத்தில் பல நாடுகளிலும் ஏற்படும் அனர்த்தங்கள், அழிவுகள் யாவற்றிற்கு இவையே காரணமாகிவிடுகின்றது. இவ்வாறானவை எம்மை விட்டு அகன்று போகவேண்டும். எம்மைத் தெரிந்து கொண்ட இறைவனின் விருப்பப்படி வாழ்ந்து ஊரெல்லாம் நற்செய்தியை எடுத்துச்சொல்வோம். அவ்வாறான நாட்களில் பலவிதமான இழிவான பேச்சுக்கள், தேவையற்ற கருத்து வேறுபாடுகள் ஏற்படத்தான் செய்யும், ஏன் எங்கள் குடும்பம், உறவுகள் கூடவே எம்மைப் பகைக்கவும் செய்யும். இதைத்தான் "சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்" (மாற். 6:4) என்பதை இயேசு கூறுகின்றார். எனவே எவ்வாறாயினும் அவை யாவும் இறைவனுக்கே செய்கின்றோம் என்று ஏற்றுக்கொண்டுநாம் செயல்படுவோம்.